30 அக்டோபர் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH பொதுக்காலம் ஆண்டின் 31 ஆம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

**செபமாலை அன்னையின் தினம் (07-10-2022)**

# மீட்பு உம் வீட்டு வாசலில் உள்ளது



க காலம் காலமாய் இருக்கும் ஞானத்தை நாம் இன்றைய முதல் வாசகத்தின்வழி அறுவடை செய்கிறோம். (ஞானநூல்: 11:22-12:2) இது இறைவல்லமையில் பின்னிப் பிணைந்து கருணையுடன் கூடிய ஒரு முரண்பாடான கண்ணோட்டமாகும். நாம் ஒவ்வொருவரும் இந்தப் பரந்த பிரபஞ்சத்தில் ஒரு சிறிய துண்டு மட்டுமே. 'நிலத்தில் ஒரு தாணியமாகவோ அல்லது காலையில் பூமியில் இறங்கும் ஒரு துளி பனியாகவோத் தான் நாம் இருப்பினும், கடவுள் தான் தோற்றுவிக்கும் அனைத்தையும், அனைத்து ஆன்மாக்களையும் விரும்புகிறார். அவர் கண்டிக்கும்போது, சிறிது சிறிதாகச் செய்கிறார். ஒறுத்தல் செய்கிறவர்களுக்கு மீண்டும் மீண்டு வருவதற்கான வாய்ப்பு அனைத்தையும் அளிக்கிறார்.

இதே போன்ற ஒரு சத்தம் தான் சக்கேயுவை இயேசு எதிர்கொண்டபோதும் கேட்டது (லூக் 19:1-10) இந்த நிகழ்வு முழுவதுமே ஒரு மென்மையான, இரக்கம் மற்றும் ஏற்றுக்கொள்ளல் ஆகியவற்றால் நிறைந்துள்ளது. இயேசு எரிக்கோவைக் கடந்து செல்ல எண்ணம் கொண்டார். அதனால் சக்கேயு இயேசுவைக் காண கூடுதல் முயற்சி எடுக்கவேண்டும். கிடைத்த வாய்ப்பை நழுவவிடக்கூடாது என்ற அவசரம்; அதனால் காட்டு அத்திமரத்தில் விரைவாக ஏறிக்கொண்டார். அவ்வழியே இயேசு செல்லும்போது நிமிர்ந்து பார்த்து, ' 'சக்கேயுவே, விரைவாய் இறங்கி வாரும், இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்' என்று கூறுகிறார். நிச்சயமாக சக்கேயு இதை எதிர்பார்த்திருக்க மாட்டார். மீட்பு தரும் கதவு அவருக்குத் திறந்தது; அவர் அதைத் தேடுவதற்கு முன்பே இரக்கம் அவரைத் தேடி முந்தியுள்ளது.

நாம் ஒவ்வொருவரும் சக்கேயுவைப் போல நம்முடைய சுயபாவங்களையும் தகுதியற்ற தன்மையையும் உணர்ந்திருக்கிறோம். ஆனால் சக்கேயு இயேசுவைத் தேடி முன்னேற ஒருபடி எடுத்து முன்னே வைக்கிறார். இயேசு எவ்வாறு அவரை அணுகுகிறார் என்பதை வாசிக்கும்போது, அதே இயேசு நமக்கும் இரக்கத்தின் இதயத்தைத் திறக்கிறார் என்பதை நாம் அறிவோம். இயேசுவின் இரக்கத்தைப் பெற்றுக்கொண்ட சக்கேயு அதைப் பிறருக்கும் தர முன்வருகிறார். தாம் செய்த தவறுகளை நன்மை செய்வதின் வழியாக சரிசெய்ய விரும்புகிறார். அவர் செய்த அநீதி மீண்டும் நீதியைத் திருப்பிக் கொடுக்க வழி செய்கிறது.

சக்கேயுவைப் போல நாமும் நம் உள்ளமென்னும் கதவுகளைத் திறக்கவேண்டும். இயேசு அதை நம்மீது திணிக்கமாட்டார். ஞானநூலில் கூறுவதுபோல, அவர் நாம் மனம் திருந்தும்பொருட்டு, நம்முடைய பாவங்களைப் பார்த்தும் பாராமல் இருக்கிறார். நம்மில் பலருக்கும் நம் பாவங்களை உணர்ந்துகொள்ள இடைவெளி தேவை. அறிவுரைக்குப் பதிலாக, தாழ்ச்சியும், கனிவும் தேவை. சக்கேயுவின் கதை, இயேசு அவருடைய வீட்டுக்குச் செல்வதோடு மட்டும் நின்றுவிடவில்லை. சக்கேயு ஆபிரகாமின் வழித்தோன்றல் என்ற அடையாளத்தையும் மீட்டுத் தருகிறது.

இதுபோன்ற தருணங்களைத் தவறவிட்டு விடாமல் கைப்பற்றிக் கொள்ளுங்கள். மீட்பு உங்கள் வீட்டு வாசலருகே உள்ளது. அதைப் பெற்றுக்கொள்ளுங்கள். "தம் ஒரே மகன்மீது நம்பிக்கைக் கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும்பொருட்டு, அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்புகூர்ந்தார் (நற்செய்தி வாழ்த்தொலி) ✤

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

...இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார்" என்று சொன்னார்

(லூக்கா 19:10)

**இன்றைய வாசகங்கள்:**

"ஞானநூல்: 11: 22-12:2;

திபா: 145: 1-2, 8-11, 13-14;

2 தெசலோ: 1:11-2:2;

லூக்கா: 19: 1-10.

INTERNAL CIRCULATION ONLY

BUL 44/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team

api@archkl.org